ஞான ஏத்தப்பாட்டு.

THE CHRISTIAN
GARDENER'S SONG.

இஃது
தஞ்சை சுவிசேட கவிராயர்
வேதநாயக சாஸ்திரியாரால்
இயற்றப்பட்டது.

விலை 25 பைசா

காந்தி அச்சகம், ஸ்ரீவைகுண்டம்.

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

A. தங்க கனி அம்மாள்

ஞான ஏத்தப் பாட்டு.

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 066
C
BANGALORE-23

"அக்காலத்திலே நல்ல திராட்ச ரசத்தைத் தரும் திராட்சத்தோட்டம் உண்டாயிருக்கும்; அதைக் குறித்துப் பாடுங்கள்".

"கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன்". ஏசாயா 27:2—3.

இந்த ஞானேத்தப்பாட்டு, கிறிஸ்துவின் திராட்சத்தோட்டத்துக்கு உவமையாக வேதாகமங்களில் ஒன்றுமுதல் நூறுமட்டும் இருக்கிற சரிதைகளைத் தெரிந்தெடுத்துப் பாடினது.

ஏனென்றால் அங்கங்கேயிருக்கிற கிறிஸ்தவர்களான தோட்டக்காரர் தண்ணீர் இறைக்கிறபோது வீணான அவலட்சணப்பாட்டுகளை புறமதஸ்தர்கள் தண்டக்கத்தின்படி பாடி வருகிறார்கள். அப்படி நம்முடையவர்கள் செய்கிறது சரியல்லவென்பதை எண்ணி, இந்தப் புதிதான ஞானேத்தப் பாட்டை உண்டுபண்ணவேண்டியதாயிற்று.

இதுமூலமாயவர்கள் ஞானத்தோட்டத்தையும் அதினுத்தம வேலையாட்களையும் நினைவு கூறக்கூடும்.

தோட்டக்காரரில் பலர் படிப்பற்றவர்களானதால் அவர்கள் வருத்தமின்றிப் படித்துக்கொள்ளும் படிக்கு இதை வெள்ளைத்தமிழாய்ப் பாடிற்று.

என்றாலும் இதின் பொருளைப் படித்தவர்கள் தேடி அறிவு கண்டடைகிறதற்கோ அநேக இடங்களில் கருகலாக்கினதுமன்றி, இதில் ஐந்தில் ஒரு பங்காகிய இருபது பாட்டை முற்றிலும் விடுகதை போற்புதை பொருளுமாக்கிற்று. அவைகளாவன:- *22, 23, 26, 47, 52, 58, 59, 62, 69, 72, 73, 74, 76, 79, 80, 81, 87, 88, 92, 98.*

பின்னையும் விசேஷித்த செய்திகளைப்பற்றி ஒன்பது லக்கத்தை இரட்டித்து இரட்டித்துப் பாடிற்று. அவை: *30, 47, 54, 58, 59, 70, 72, 80, 100.*

இப்படியே சொல்லப்பட்ட இருதரத்தாருக்கும் பொதுவாக வேதநாயக சாஸ்திரியார் *1815* ம் ஷு இந்த ஞானேத்தப்பாட்டைச் சுருக்கத்தில் நூற்றொரு பாட்டாகப்பாடி அதை யாவரும் ஒப்புக் கொள்ளும்படிக்கு வேதவாக்கிய உதாரணங்களைக்கொண்டு ரூபகாரம்பண்ணி எழுதினார்.

THE CHRISTIAN GARDENER'S SONG.

ஞான ஏத்தப் பாட்டு.

காப்பு.

சத்திய வேதமார்க்கச் சபையெனுந் தோட்டத்துக்கு
நித்தியந் தண்ணீர்ப் பாய்ச்சு நெறிமிகு மேசுநாதர்
உத்தம வேலையாட்க ளுவமைஞா னேத்தப் பாட்டு
பத்தியாய்ப் படிக்க வொன்றும் பராபரன் காப்ப
தாமே.

1. ஒரு பொருளே தெய்வம் — நீ
யுகந்து தொழு நெஞ்சே
யுடைந்து மனங் கெஞ்சே — அந்த
வொரு பரனுக் கஞ்சே.

2. இரண்டு மரஞ் செய்தா — னதி
லொன்றருந்தத் தீது
பண்டு விலகாது — பவங்
கொண்டு வந்தாள் மாது.

3. மூன்றுமுத லொன்றே — அதின்
முறைமை யொரு மூன்றே
தோன்றுதற் கெட்டாதே — யெட்டிச்
சொல்லவுங் கூடாதே.

4. நாலு குருமார்கள் சொல்லி
நாட்டினதே போதம்
தீட்டினதே நீதம் — ஆதித்
திருமகனுர் வேதம்.

5. ஐந்துவடு வல்லோ — நம
தாண்டவனுர் காயம்
ஆண்டவனுர் காயம் — நமக்
கடைக்கலச்ச காயம்.

6. ஆறுகுடம் நீரை — அவ
னறிய ரசஞ் செய்தான்
கருதியருள் பெய்தான் — கா
னுவினிலே மெய்தான்.

7. ஏழு நிருபந்தா ளே
ரேழு சபைக் குந்தா
னேழுடுக்கை மெய்ய — னேய
னெழுதிவிட வந்தான்.

8. எட்டுநரர் தம்மை — அந்த
ஏக வெள்ளக் காட்டில்
திட்டமுடன் காத்து — தயை
செய்தது சமர்த்து.

9. ஒன்பதுபேர் செல்லே — நன்றி
யுணர்ந்தறியாக் கல்லே
யோடிவர வில்லே — யவ
ரூழிவினேத் தொல்லே.

10. பத்து நெறி தந்தான் — இருகற்
பலகையில் வரைந்தான்
வலிமைகள் புரிந்தான் — சீனு
மலேயதி லிருந்தான்.

11. பதினொருதா சுக்கும் — ஒரு
பணங் கொடுத்தான் பெண்ணே
மணமிடத்தான் விண்ணே — நின்று
வந்த பட்சங் கண்ணே.

12. பன்னிரு சீ ஷாட்கள் — அதிற்
பிசாசொருத்த னுண்
பொன்னே நம்பித் தாழ்ந்தான் — கொடும்
வன்னரகில் வீழ்ந்தான்.

13. பத்துடன் மூன் ருண்டாய் — அதி
சித்திரமாய்ச் சால்மோன்
சுத்தமறைக் கோட்டை — தனில்
கட்டி வைத்தான் வீட்டை.

14. பதினலாண் டேன்றி — யிரு
பாவையர்க்காய் வேண்டிப்
பாடுபட்டங் கண்டிப் — பரிந்
தாடு மேய்த்தா னெண்டி.

15. பத்துடனேந் தாண்டு — ஜெபம்
பண்ணும் எசேக் கியாவை
அத்தன்வைத்துக் காத்தா — ரவ
னுயிசுடன் சேர்த்தார்

16. பதினறுவர் தீர்க்கர் — சொன்ன
விதிமுறையின் மார்க்கம்
படியதனில் வந்தான் — கிறிஸ்
தடி முடிவி லான்ருன்.

17. பதினேழாண் டாக — இரு
பலகை முனிச் சீடன்
அதிபதியா யாண்டான் — வானத்
தாச்சரியங் கண்டான்.

18. பத்துடனெண் காலம் — வளை
பட்ட கூனி மேற்கை
வைக்கநிமிர்ந் தாளே — யொரு
மிக்கமகிழ்ந் தாளே.

19. பத்தொன்பதிற் சாலமோன் — ராஜ
பட்டத்துக்கு வந்தான்
பட்டத்தில்வந் தோர்கள் — தொகை
பத்தொன்பது பேர்கள்.

20. இருபதப்பங் கண்டான் — முன்னு
லேருழுது கொண்டான்
ஒரு சதம்பேர்க் குந்தான் — அவன்
பெருவிருந்து தந்தான்.

21. ஆண்டிருபத் தொன்றில் — சிதேக்
கியாவரச ஞகி
யாண்டவனே யெய்தான் — றீங்
கானதையே செய்தான்.

22. ஏரோட்டி மாடு — கணக்
கிருபத்திரண் டாக
யெரோபெயா மாட்டை — யங்கே
யில்லாம லோட்டே.

23 குருவினுட மாட்டை — விட்டு
கோவிலுட மாடும்
தெரிசனத்தின் மாடும் — சேர்ந்
திருபதுடன் மூன்றே.

24. இருபத்தினல் மூப்பர் — பணிந்
திசைந்து தொழும் பாதா
இருவகுப்பின் வேதா — எமை
யாளுமேசு நாதா.

25. ஐயஞ்சுறு காலே — முத
லாலயத்தின் வேலே
செய்ய இலே பித்தா — ருட
திறமெனக் கற்பித்தார்.

26. பதின்மூன்று சாஞ — னவனைப்
படவடித்தா னெட்டா
னெதிரிகளுக் கஞ்சேன் — கணக்
கிருபதுட ஞறே.

27. ஐயனிருபத்தே — ழாண்
டருளப்பன் யோர்தானி
லடுத்தரிய ஞானஞ் — சொல்லிக்
கொடுத்தன னிஸ்நானம்.

28. இருபத்தெட்டாண் டாக — முனம்
எகூவிச ரேலே
யொருபத்தியா யாண்டான் — பின்பு
கருமத்தினுல் மாண்டான்.

29. எசேக்கியாவு — மையஞ்
சிருபத் தொன்ப தாண்டாய்
ராசோக்கியஞ் செய்தா — னமத்சி
யாவுமவ்வா றுய்தான்.

30. மாடுமுட்டுந் தெண்ட — மெங்கள்
மானுவேலின் கூலி
மூடலென்ன கள்ளி — யது
முப்பதல்லோ வெள்ளி.

30. முப்பது வெள்ளிக்கு — யூதா
முத்தமிட்டுக் காட்டி
நற்பொருளை விற்ருன் — பாவி
நான்று கொண்டு செத்தான்.

31. முப்பத் தொரு மன்னர் — தம்மை
முறியடித்துக் கொன்ருன்.
முடிமணிக் கிரீட — னெங்கள்
மோசேமுனி சீடன்.

32. முப்பத்திரு மன்னர் — வந்து
முனைந்து பெனு தாத்தை
ஒப்புரவாய்ச் சேர்ந்தா — ராகாப்
பொடு பொருதி தாழ்ந்தார்.

33. முப்பத்துமூன் ருண்டி — லெங்கள்
முதன்மை யேசு நாதர்
பற்பலபாடா ராகிப்
பரமதற்குப் போனுர்.

34. முப்பத்துட ஞலு — கிறிஸ்
தற்புதனு ராண்டில்
கற்புறுமிஸ் தேவான் — முந்திக்
கல்லெறியப் பட்டான்.

35. முப்பத்துட னைந்து — எங்கள்
முன்னப்பனு ராண்டில்
முன்னப்பனுர் காட்சி — தரச்
சின்னப்பரே சாட்சி.

36. ஆயிப்பட்ட ணத்தோர் — முப்பத்
தறுவர்களை வெட்ட
தீயகர்மிப் பட்டான் — சாபத்
தீடதினுற் கெட்டான்.

37. முப்பதியோ ரேழு — படைக்
கொப்புமதி தீரர்
முகனையுள்ள வீரர் — தாவீ
தகமகிழுஞ் சூரர்.

38. முப்பத்தெட்டாண் டென்னே — யொரு
முழுரோகி தன்னை
யற்புதனுர் பார்த்தா — ரவ
னல்ல லெல்லாந் தீர்த்தார்.

39. முப்பத்தொன்ப தாண்டிற் — கால்கள்
முழுவதும் நோய் பூண்டு
மப்பனிடத் தெய்தா — ஞசாத்
தப்பிதமே செய்தான்.

40. நாற்பதுநா ளாக — மழை
ராப்பகலாய்ப் பெய்ய
மூப்புலகத் தோரை — யாதி
முதல்வ னழித் தாரே.

41. இராஜன் ரேகோப் பேயாஞ் — சமை
நாற்பத் தொன்றில் தானே
நலமிழந்து மானே — யவ
னிராஜா வா ஞனே.

42. நாற்பத்திரு மக்கள் — வந்து
நாப்பியெலி சாவை
தீழ்ப்புரைத்துக் கெட்டார் — கரடி
சென்று கொல்லப் பட்டார்.

43. நந்தர் கிறிஸ் தாண்டே — யது
நாற்பதுடன் மூன்றே
யந்தியோகியாப் பேர்கள் — சபை
முந்துகிறிஸ் தோர்கள்.

44. நாற்பதுடன் நான்கே — கிறிஸ்து
நாதர் தம தாண்டே
மூர்க்கெரோதே யென்ருன் — பெரிய
யாக்கோபைக் கொன்ருன்.

45. நாற்பத்தைந்து தூண்க — ளிட்ட
நற்பிரமா ணங்க
நாலுபத்தி யோடு — சாலமோன்
கோலினஞேர் வீடு.

46. ஐயனுட கோவி — ஞற்பத்
தாறு வரு டத்திற்
செய்த கட்டு வேலை — யது
சீயோன் மலை மேலே.

47. வேல்சென் ருண்டாகி — மிசும
வேல் சுனத்தாண் டோடே
கோல் சென்ருண் டேற்றி — லது
நாலொருபத் தேழே.

47. நாற்பதியி னேழே — கண்கள்
பார்ப்பதெல்லாம் பாழே
ஞானப் பாட்டுக் கேளே — யேசு
நாதர் பாட்டுக் காளே.

48. இஷ்டவிச ரேலர் — நடுவி
லேலேபித்த மார்க்கு
விட்டப்பட்ட ணங்கள் — நாற்பத்
தெட்டென் றெழு துங்கள்.

49. ஒய்வுவரு ஷங்கள் — கணக்
கோரே மூண் டானல்
ஞாயமுட னெண்ணே — னது
நாற்பத் தொன்ப தண்ணேன்.

50. துன்பமுற ஆமான் — ஒரு
தூக்குமரஞ் செய்தான்.
ஐம்பது மு ழந்தான் — அதி
லங்கவன் இ றந்தான்.

51. ஐம்பத்தொரு பேரை — யகசி
யாவெலியா வின் பால்
வன்புற்றிரு காலே — விட
மாய்ந்தனர் தீயாலே.

52. தலைமுறை முப்பங்கு — மரக்
கலமுதற்பன் னென்று
யலைய வைத்தான் பண்டு — கணக்
கைம்பதுட னிரண்டு.

53. ஐம்பதுடன் மூன்றே — யெம
தண்ணல் பிறந் தாண்டே
சம்பிலிப்பற் சீட்டார் — குருசு
தனிலேற்றப் பட்டார்.

54. ஐம்பத்தினு லோசே — வகுப்
பாயுரைக்க மோசே
யென்பவர்நூ லைந்தை — யெஸ்று
முன்பிரித்த விந்தை.

54. இன்ப மனு வேலே — தவி
திறைவனின் செங் கோலே
துன்ப முற லானுர் — தம
தன்பதுட னுலே.

55. வன்புற்ற மனுசே — வளாந்
தைம்பத் தோரைந் தாண்டா
யன்பற்றர சாண்டான் — கொடு
மாகடியம் பூண்டான்.

56. துன்னுமைம்பத் தாறு — திரு
மன்னவனு ராண்டு
சின்ன யாக்கோ பற்சே — சிஷ்டர்
சிலையெறியப் பட்டார்.

57. (ஐம்பதினே) ழாண்டே — கிறிஸ்
தெம்பரனுர் யாண்டே
வன்பெகிப்த் தெத்தன் — வெகு
மனுடரைக் கலைத்தான்.

58. ஈச்சமரக் கூட்ட — மங்க
ணிருந்த தண்ணீ ரீட்ட
மீச்சையினிற் பட்டே — தொகை
வாச்சுதைம்பத் தெட்டே.

58. துன்பமுறப் பட்டே — யுல
கின்ப மெல்லாம் விட்டே
நன்பதத்தைக் கிட்டே — கிறிஸ்
தன்பதுட னெட்டே.

59. பெந்தே கோஸ்தே நாளு — மெங்கள்
பிரானுயிர்த்த நாளும்
முந்துமலை நாளு — மைம்பத்
தொன்பது காண் கேளும்.

59\. அன்னை மரி யீண்டு — பிறந்
தைம்பத் தொன்ப தாண்டு
நன்மரண மாணாள் — யோவான்
றன் மனையில் மாணாள்.

60, ஆறு பத்திஸ் தாதி — யெம்
மாவு சிக் கிராம
மா ற தில்லான் போனான் — ஒரு
வழிப் போக்க னானான்.

61\. அறுபத்தோரா மாண்டி — லுரோ
மாபுரியில் பாவுல்
சிறையிலுறப் பட்டான் — மூன்று
திரு நிருபம் விட்டான்.

62\. அறுபத்திரு வாரங் — களுண்
டாகுமென் றந்நேர
மிறையவன் மேற் சூட்சி — தானி
யேலெழுதுங் காட்சி.

63\. அறுபத்திமூன் றாண்டி — லித்
தாலியாவிற் றங்கி
நிறை யெபி ரே யர்க்குப் — பவு
னிருபம் விட்டான் மெய்க்கு.

64\. எட்டுற ழெட் டாண்டிற் — கொடுந்
துட்டனேரோ ராயன்
சிட்டர் துன்ப மிட்டா — னுரோமைப்
பட்டணத்தைச் சுட்டான்.

65\. இருவகுப்புச் சீவ — னதி
னுருளை யொன்றைக் கூட்டி
நிற்குமுக மெல்லாந் — தொகை
யறுபதுட னைந்தே.

66\. நாளறுபத் தாறே — யொரு
நாரி பெண்ணைப் பெற்றா
ஞரியர் தாய் துற்றே — கோவிற்
சேர்து முறை யற்றே.

67\. அறுபதினே ழாண்டு — ரோ
மாவிற் பவுல் மீண்டு
சிறையிலுறப் பட்டா—னிரு
திரு நிருபம் விட்டான்.

68\. சிரம் வெட்டுண்டான் பவுல் — கிறிஸ்
தறுபத் தெட்டாண் டோய்விற்
குரு சிலறை யுண்டான் — குன்
றப்பன் தலை கீழாய்.

69\. பாம்பாட்டித் துக்க — மெங்கள்
பாட்டனொரு சந்தி
யாங்கொரு நாள் சாகத் — தொகை
யறுபத் தொன்ப தாக.

70\. ஏழு பத் தாண் டாகப் — பின்னு
மிஸ்ராவே லித் தார்
இடறுதலே பெற்றார் — பாபே
லடிமைத் தனத் துற்றார்

70. தொழு முதலார் தோற்ற — மாண்டோ
ரெழுபதல்லோ மாற்ற
முழு யெருச லேமை — யுரோம
ரழிவு செய்த தீமை.

71. எழுபத்தொரு மூப்பர் — பழை
யேற்பாட்டி னங்க
மெருசலேச் சங்க — மக்கப்
பேயரினுட் டுங்கம்.

72. உரோமைப் பாப்பு மார்கள் — பிரஞ்சு
சீர்மையவி ஞோனில்த்
தாமிருந்த ஆண்டே — யது
பாபேல் சிறை யிரண்டே.

72. சிட்டன் சுவார்ச் சுய்தான் — தஞ்சைத்
திருக் கூட்டஞ் செய்தான்
எட்டுமதி யற்றான் — வய
தெழுபத் திரண் டுற்றான்.

73. கோலுரைத்த லக்க — மக்
கோலே விற்ற வெள்ளி
கோல்கொடுத்தாண் டோடே — கணக்
கோரெழுபான் மூன்றே.

74. வயதன்பது மில்லான் — தொட்ட
வயதுபனி ரண்டா
டுயர் கொள் பனி ரண்டா — ளொடு
தொகை யெழுபா னூலே

75. ஆபிராமி னுண்டே — யெழுபத்
தைந்தினிலா ரானைத்
தீவிரமாய் விட்டான் — கானான்
சீர்மையிலுட் பட்டான்.

76. வேலேவிற்ற வெள்ளி — யது
வீழ்ந்த திருப் பள்ளி
யோல மிட்டுக்கூறே — கணக்
கோரெழுபத் தாறே.

77. சுக்கோத்தூ ராரி — லெழு
பத்தேழு பேரை.
நற்கீதே யொன்றான் — அவன்
முட்கீறிக் கொன்றான்.

78. காரணனா ராண்டு — கணக்
கோரெழுபத் தெட்டி
லாரியனும் லூக்கா — சுவி
சேடகன் வான் புக்கான்.

79. நொண்டியுட கூட்ட — மைய
னன்றறியா ரோட்ட
மொன்று படக் கூட்டே — யெழுபத்
தொன்ப தென்று நாட்டே.

80. எந்தை வந்து மீண்டே — யோ
ரெண்பது தா னுண்டே
யந்திரேயப்போஸ் தலன் — சிலுவை
யதிலறையப் பட்டான்.

80. பழமை முப்பத்தொன்பான் — தள்ளு
படி பதியே நான்கா
மிள சிருபத் தேழே — தொகை
யெண்பதுகா னூலே.

81. பன்னிகளிற் பாதி — வைப்
பாட்டிகளவ் வாறே
கன்னிகளு மின்னு — மொக்கக்
கணக்க தெண்பத் தொன்றே.

82. யேசு கிறிஸ் தாண்டு — கணக்
கெண்பதுட னிரண்டு
தேசுற்ற மத்தி யாவே — தனது
சிரமிழந்தான் கோவே.

83. ஏறும் வய தானு — லோ
ரெண்பதுடன் மூன்றி
லாரோனுஞ் சென்றுன் — எகிப்துப்
பார்வோன் முன் நின்றுன்.

84. எண்பதுட னலு — வய
தேறியதோ ரன்னுள்
பண்பு சிமி யோனைப் — பின்
பற்றி நெறி சொன்னுன்.

85. ஆசாரி மார்க — ளெண்பத்
தைந்து பெரி யோரை
கூசாமற் கொன்றுன் — பாவி
கொடிய சவுல் மன்றுன்.

86. என்பதுட றுறு — வய
தேறுமபி ராமே
நண்புட னுகார் — ஒரு
நந்தனனைப் பெற்றுன்.

87. கோலுக்குக் கோன் மிச்சம் — பசுங்
கோலுடனே யேற்றிக்
கோலிடையைத் தள்ளி — அவர்
கோலோ டெண்பத் தேழே.

88. இரு வகுப்புச் சீட — ரப்பா
லெழு தரும வான்க
ளிருவருமே செத்தார் — பவு
ளிருப னெண்பத் தெட்டே.

89. ஈரிருவ ரன்றே — இந்தப்
பாரினரர்க் கென்றே
யெழுதுமுப காரம் — எண்பத்
தொன்ப ததிகாரம்.

90. பண்ட பிர காமும் — நகை
கொண்டு பெறு வாளோ
தொண்டு பத்தாண் டில்லி — சாரா
ளென்று பிர மித்தாள்.

91. தொண்ணூற்றே டொன்று — சமை
துன்னு மலட் டம்மை
கண்ணுற் கண் டாளே — ஈசாக்
கைப் பெற்றுக் கொண் டாளே.

92. முத மிருக லக்கம் — பின்னே
மூன்றிலொன்றைத் தள்ளி
நதி மிருகஞ் செற்று — லப்போ
இரண்டுடன் தொண் ணூறே.

93. நண்பனந்திப் பாவைக் — கிறிஸ்தாண்
டொன்பதியே மூன்றில்
துன்ப முறக் கொன்றான் — கொடுந்
தோமிசியான் மன்றான்.

94. சீர்திருந்து மாண்டு — மிசரேல்
தின்றமன்ன வாண்டு
மோரரசே ழொன்று — மொக்க
நாலுடன் றெண் ணூறே.

95. அரிய தொண்ணூற் றைந்து — ஞா
யங்கடனைத் தேர்ந்து
திருமணைவாய் முன்னே — லுத்தர்
சிறந்தடித்தா ரென்னே.

96. ஆய்ந்த பரன் சங்கந் — தொண்ணூற்
றுறில் யோவான் றுங்க
மூய்ந்த சுவி சேட — மூன்று
முகனிருபப் பாடம்.

97. அடிமைகளாய்த் தொண்ணூற் றே
ழாயிரம் பேர் யூதர்
கொடுமைகளான் மாணர் — சாலேங்
கெடு மழிவிற் போனர்.

98. காட்டிலுற்ற மூப்பர் — யோவான்
காட்சி கண்ட மூப்ப
ரேட்டுறுஞ் சீ வன்க — டொகை
யெட்டுடன் தொண் ணூறே.

99. நூங்க பிர காமின் — றெண்
ணூற் றென்பதா மாண்டி
லோங்கலுந்தான் வந்தான் — எந்
துயர் காட்சி தந்தான்.

100. ஒரு நூறு ராத்த — லுறுங்
கரிய வெண்போ ளத்தா
லிருவர்கள் பூ சித்தா — ரெம
தரசனுட லைத்தான்.

100. நூற்றண்டு பத்து — பினு
நூற்றண்டே யெட்டு
நூற்றண்டே மும்மா — இந்
நூல் சமைத்த தம்மா.

101. நூற்றொரு சொல் லாக — வேத
சாஸ்திரியா ராய்ந்து
சேர்த்த மறைப் பூட்டே — ஞா
னேத்த மெனும் பாட்டே.

ஆவிக்குரிய சில புஸ்தகங்கள்

		ரூ. பை
1	பொன் தூள்	0—40
2	பரமகுரு	0—30
3	பிரதான வரமாகிய அன்பு	0—40
4	இரட்சிப்பு, அதின் நிச்சயம், அதின் சந்தோஷம்	0—50
5	சிறந்த தேவ ஊழியன் (ஷெர்வூட் எடி)	0—50
6	கிறிஸ்தவ ஜீவியம் (ஷெர்வூட் எடி)	0—50
7	பரிந்து பேசும் ஜெப ஒழுக்க நூல்	0—40
8	சிலுவை சுமந்தோன் (12 படங்களுடன்)	0—40
9	சுவிசேஷ பிரசங்கங்கள் (Rev. S. பரமானந்தம்)	3—75
10	D. L. மூடி பிரசங்கங்கள்	2—00
11	சார்ல்ஸ்பின்னி, அவரது பிரசங்கங்கள்	0—75
12	சாது சுந்தர்சிங் பிரசங்கங்கள்	2—00
13	மெஞ்ஞான விளக்கம்	0—75
14	ஆவிக்குரிய ஜீவியவிளக்கம்	0—65
15	கிறிஸ்துவோடும், கிறிஸ்து இல்லாமலும்	1—50
16	கைலாச மகா ரிஷி	0—75
17	கைலாச மகா ரிஷி (இங்கிலீஷ்)	1—25
18	சாயுச்சிய சாதனை விளக்கம்	2—20
	(மேல்படி ஏழும் சாது சுந்தர்சிங்கைப் பற்றியவை)	
19	சந்திர லீலாள்	1—00
20	கிறிஸ்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை	1—00
21	சண்முகநாத கவிராயர்	0—50
22	ஜெசிக்காளின் முதலாம் ஜெபம்	0—55
23	ரோமான் மார்க்க சீர் தூக்கல்	0—75
24	அமல குரு சதகம்	0—50
25	சாஸ்திரக்கும்மி	1—50
26	ஞான ஏத்தப்பாட்டு	0—25

கிடைக்குமிடம்:-

S. தாமஸ்இரத்தினம், 66, செட்டியக்குடித்தெரு
திருச்செந்தூர், திருநெல்வேலி Dt.